‘சிஎன்ஜி’ பேருந்தில் தீ; பயணிகள் உயிர் தப்பினர்

சென்னை, ஜூலை 2: சென்னை அடையாறில் செவ்வாய்க்கிழமை சாலையில் சென்றுகொண்டிருந்த மாநகர சிஎன்ஜி பேருந்து தீப்பற்றி எரிந்தது. பயணிகள் அனைவரும் உடனடியாக வெளியேற்றப்பட்டதால், உயிர்சேதம் தவிர்க்கப்பட்டது.

சென்னை பாரிமுனையிலிருந்து கேளம்பாக்கத்துக்கு பிற்பகல் 2.30 மணியளவில் ஒரு மாநகரப் பேருந்து புறப்பட்டுச் சென்றது. பேருந்தை சஞ்சீவ்குமார் என்பவர் ஓட்டினார். இயற்கை எரிவாயுவை (சிஎன்ஜி) எரிபொருளாகக் கொண்டு இயங்கிய அந்தப் பேருந்து அடையாறு எல்.பி. சாலையில் 3 மணியளவில் சென்ற போது, அதன் என்ஜின் பகுதியிலிருந்து புகைவெளியேறியது.

இதைப் பார்த்த ஓட்டுநர் சஞ்சீவ்குமார், பேருந்தை உடனடியாக சாலையோரம் நிறுத்தினார். அவரும், நடத்துநர் குட்டியப்பனும் பேருந்திலிருந்த பயணிகளை வேகமாக வெளியேற்றினர். அதற்குள் பேருந்தின் முன்பகுதி தீப் பிடித்து மளமளவென எரியத்தொடங்கியது.

இந்த விபத்து குறித்து அறிந்த திருவான்மியூர் தீயணைப்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். மயிலாப்பூர், துரைப்பாக்கம் ஆகிய இடங்களிலிருந்தும் தீயணைப்பு படையினர் வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

நீண்டநேர போராட்டத்துக்குப் பிறகு தீ முழுமையாக அணைக்கப்பட்டது. தீ விபத்தின் காரணமாக, அந்த சாலையில் முழுமையாக போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதனால் அடையாறு, திருவான்மியூர் பகுதியில் கடுமையான நெரிசல் ஏற்பட்டது.

அடையாறு போலீஸார் வழக்குப் பதிந்து தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை செய்து வருகின்றனர்.

சென்னை அடையாறு எல்.பி.சாலையில் செவ்வாய்க்கிழமை சாலையில் சென்றுகொண்டிருந்த போது திடீரென தீப்பற்றி எரிந்த மாநகரப் பேருந்து (இடது) தீயில் சேதமடைந்த எலும்புக் கூடாக காட்சியளித்த பேருந்தை பார்வையிட்ட அதிகாரிகள்.

கடல் சார் படிப்புகளில் பெண்கள் அதிக அளவில் சேர வேண்டும்

மத்திய அமைச்சக செயலர் ஷியாம் ஜெகந்நாதன்

அமெட் பல்கலை. சார்பில் சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கடல் சார் சர்வதேச மாநாட்டில், மாநாட்டு மலரை வெளியிட்ட மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர் வழி அமைச்சகத்தின் செயலர் ஷியாம் ஜெகந்நாதன். உடன் பல்கலைக் கழக நிறுவனர் ஜெ.ராமச்சந்திரன், இணை வேந்தர் ராஜேஷ் ராமச்சந்திரன் உள்ளிட்டோர்.

சென்னை, ஜூலை 2: கடல்சார் படிப்புகளில் பெண்கள் அதிகம் சேர்ந்து படிக்க வேண்டும் என மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர் வழி அமைச்சகத்தின் செயலர் ஷியாம் ஜெகந்நாதன் தெரிவித்தார்.

அமெட் பல்கலைக்கழகம் சார்பில் கடல் சார் உச்சி மாநாடு சென்னை கோட்டூபுரம் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாநாட்டில் மத்திய அமைச்சக ஷியாம் ஜெகந்நாதன் பங்கேற்று கடல் சார் உச்சி மாநாடு குறித்த புத்தகத்தை வெளியிட்டுப் பேசியது:

இந்தியாவில் 7 ,500 கி. மீ. தொலைவுக்கு கடல் எல்லை பரந்து விரிந்துள்ளது.

மேலும், நாட்டில் 12 பெரிய துறைமுகங்களும் 200 சிறு துறைமுகங்களும் உள்ளன. இந்த துறைமுகங்கள் மூலம் கப்பல் சரக்கு போக்குவரத்து நடைபெறுகிறது.

இந்திய பொருளாதார வளர்ச்சியில் கப்பல் சரக்கு போக்குவரத்து முக்கிய பங்கு வகிக்கிறது. கடல்சார் படிப்புகளில் பெண்கள் அதிகம் சேர்ந்து படிக்க வேண்டும். அதேபோல் துறைமுக பணி மற்றும் சரக்கு பெட்டகம் கையாளும் பணிகளில் பெண்கள் அதிக அளவில் ஈடுபட வேண்டும். இந்த துறையில் பல் வேறு வாய்ப்புகள் உள்ளன.

துறைமுகப் பணி மற்றும் கப்பல் பணியில் ஈடுபடும் ஊழியர்கள் பாதுகாப்பு நடைமுறைகள் முறையாக கடைப்பிடிக்கப்படுவதுடன் மிகவும் கவனமாகவும் செயல்பட வேண்டும் என்றார் அவர்.

முன்னதாக, கப்பலில் பணியில் ஈடுபடும் ஊழியர்கள் பாதுகாப்புடன் செயல்படுவது குறித்த குறும்படம் மாணவர்களுக்கு திரையிடப்பட்டது.

இந்நிகழ்வில் அமெட் பல்கலை. நிறுவனர் மற்றும் வேந்தர் டாக்டர் ஜெ. ராமச்சந்திரன், இணை வேந்தர் ராஜேஷ் ராமச்சந்திரன் , இணை வேந்தர் கர்னல் ஜி. திருவாசகம், துணைவேந்தர் ஸ்ரீநிவாச கோபால், கடல் சார் பல்கலைக் கழகங்களின் சர்வதேசத் தலைவர் ஆடம் வெயின்ட்ரிட் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

புற்றுநோய் நிறமிகள் கலப்பா?: பானி பூரி கடைகளில் ஆய்வு

சென்னை, ஜூலை 2: புற்றுநோயை ஏற்படுத்தும் நிறமிகள் பானி பூரி மசாலாவில் கலக்கப்படுவதாக எழுந்த புகாரின் பேரில் தமிழகம் முழுவதும் பானி பூரி கடைகளில் ஆய்வு மேற்கொள்ள உணவுப் பாதுகாப்புத் துறை உத்தரவிட்டுள்ளது.

பானி பூரி மசாலாவில் பச்சை நிறத்தை அதிகரிக்க செயற்கை நிறமூட்டிகள் சேர்க்கப்படுவதாக கர்நாடகத்தில் புகார் எழுந்தது. அதன்பேரில் அந்த மாநில உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டதில் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய ரசாயனங்கள் அதில் சேர்க்கப்பட்டிருந்தது உறுதி செய்யப்பட்டது.

இது பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில், தமிழகத்தில் விற்பனை செய்யப்படும் பானி பூரிகளின் தரத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள பானி பூரி கடைகளில், சென்னை மாவட்ட உணவு பாதுகாப்புத் துறை நியமன அதிகாரி டாக்டர் சதீஷ்குமார் தலைமையிலான குழுவினர் செவ்வாய்க்கிழமை சோதனையில் ஈடுபட்டனர். அப்போது மசாலா மாதிரிகளை எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பி வைத்தனர்.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் டாக்டர் சதீஷ்குமார் கூறியதாவது:

கர்நாடக சம்பவத்தைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள அனைத்து பானி பூரி கடைகளிலும் ஆய்வு நடத்த தமிழக உணவு பாதுகாப்புத்துறை ஆணையர் உத்தரவிட்டுள்ளார். சென்னையில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பானி பூரி கடைகள் செயல்பட்டு வருகின்றன.

பானி பூரி என்பது மிகவும் ஆரோக்கியமான உணவு வகைகளில் ஒன்று. சுறுசுறுப்பு தன்மையை அதிகரிக்கும் தின்பண்டம். ஆனால் பானிபூரி கடைகளில் முறையாக சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படாமல், வெறும் கைகளில் அவற்றை விநியோகிக்கின்றனர்.

அதேபோன்று பானி பூரிக்கான மசாலா நீரை ஒரு நாள் மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஆனால் சில இடங்களில் அடுத்த நாளுக்கும் அதே நீரை பயன்படுத்துகின்றனர். இதனால் உடல் உபாதைகள் ஏற்படும்.

மேலும் பானி பூரி மசாலா தயாரிக்கும்போது பச்சை நிறத்துக்காக ‘ஆப்பிள் கிரீன்’ எனப்படும் நிறமூட்டியை கலக்குகின்றனர். இந்த ரசாயனம் கூட புற்றுநோய்க்கான காரணியாக இருக்கலாம். எனவே கர்நாடகத்தில் மேற்கொண்ட அதே பரிசோதனையை தமிழகத்திலும் மேற்கொள்ள இருக்கிறோம். இதில் புற்றுநோய்க்கான காரணிகள் உறுதி செய்யப்பட்டால் உடனடியாக சம்பந்தப்பட்ட வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

சென்னை மெரீனா உழைப்பாளர் சிலை அருகே பானி பூரி கடையில் செவ்வாய்க்கிழமை இரவு உணவுப் பொருள்களை ஆய்வு செய்த உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலர் சதீஷ்குமார், உதவி ஆய்வாளர் சக்திவேல் உள்ளிட்டோர்.

ரயிலில் கஞ்சா கடத்தல்: ஒடிஸா பெண்கள் இருவர் கைது

சென்னை, ஜூலை 2: ஒடிஸாவில் இருந்து 20 கிலோ கஞ்சா கடத்தி வந்த இரு பெண்களை ரயில்வே போலீஸார் கைது செய்தனர்.

ஒடிஸா மாநிலம் புரியிலிருந்து சென்னைக்கு வாரந்தோறும் விரைவு ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயில் திங்கள்கிழமை பிற்பகல் சென்னை சென்ட்ரல் வந்தது. அப்போது, அதில் வந்த இரு பெண்களிடம் போலீஸார் விசாரித்துள்ளனர்.

இதில் அவர்கள் ஒடிஸா மாநிலத்தை சேர்ந்த சரோஜினி ரௌத் (39), நளினி சமல் (44) என தெரியவந்தது. அவர்களின் உடைமைகளை போலீஸார் சோதனை செய்தபோது, அவர்கள் ஒடிஸாவிலிருந்து 20 கிலோ கஞ்சா கடத்தி வந்தது தெரிய வந்தது.

உடனே அவர்களை போலீஸார் கைது செய்து தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

சென்னை நுண்ணறிவுப் பிரிவுக்கு புதிய இணை ஆணையர் நியமனம்

சென்னை, ஜூலை 2: சென்னை பெருநகர காவல் துறையின் நுண்ணறிவுப் பிரிவு இணை ஆணையராக ஜி.தர்மராஜன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

காவல் துறையில் நுண்ணறிவுப் பிரிவின் பணி மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது. நுண்ணறிவுப் பிரிவு தலைமை பொறுப்பில் ஐ.ஜி.,டிஐஜி ரேங்க் அளவிலான அதிகாரிகளே கடந்த 2017-ஆம் ஆண்டு வரை நியமிக்கப்பட்டு வந்தனர். ஆனால், அதன் பின்னர் அப் பதவிக்கு காவல் கண்காணிப்பாளர் அளவிலான அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில், நுண்ணறிவுப் பிரிவு இணை ஆணையராக சென்னை பெருநகர காவல் துறையின் கிழக்கு மண்டல இணை ஆணையர் ஜி.தர்மராஜன் செவ்வாய்க்கிழமை நியமிக்கப்பட்டார். இவர், டிஐஜி ரேங்க் அதிகாரி ஆவார்.

ஏற்கெனவே நுண்ணறிவுப் பிரிவு-1 துணை ஆணையராக இருந்த எஸ்.அரவிந்த், திருச்சி மாநகர காவல் துறையின் தலைமையிட துணை ஆணையராகப் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை தமிழக அரசின் உள்துறை முதன்மைச் செயலர் பெ.அமுதா பிறப்பித்துள்ளார்.

ஓமந்தூரார் பல்நோக்கு மருத்துவமனை புதிய இயக்குநராக ஆர்.மணி நியமனம்

சென்னை, ஜூலை 2: ஓமந்தூரார் அரசு பல்நோக்கு மருத்துவமனையின் புதிய இயக்குநராக டாக்டர் ஆர். மணி நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை முதல்வராகவும், மருத்துவக் கல்வி இயக்குநராகவும் பதவி வகித்த டாக்டர் விமலா, அப்பொறுப்புகளில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், ஒப்பந்த அடிப்படையில் ஓமந்தூரார் அரசு பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் இயக்குநராக கடந்த 2019-ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்டார். அந்த பதவிக் காலம் நிறைவடைந்ததை தொடர்ந்து கடந்த ஜூன் 30-ஆம் தேதியுடன் டாக்டர் விமலா பணியில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இதையடுத்து, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வராக இருந்த டாக்டர் ஆர். மணி, அரசு பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் புதிய இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வராக பதவி உயர்வு பெறுவதற்கு முன்பு, சென்னை ராயப்பேட்டை அரசு மருத்துவமனையின் மருத்துவக் கண்காணிப்பாளராக ஆர்.மணி இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

2-ஆம் கட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு வசதி: அரசு உறுதி

சென்னை, ஜூலை 2: இரண்டாம் கட்டமாக கட்டப்பட்டு வரும் மெட்ரோ ரயில் நிலையங்கள், மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் அமைக்கப்படும் என தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் உறுதி அளித்துள்ளது.

மெட்ரோ ரயில் நிலையங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தள வசதி ஏற்படுத்த அரசுக்கு உத்தரவிடக் கோரி வைஷ்ணவி ஜெயக்குமார் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி (பொ) அரங்க.மகாதேவன் மற்றும் நீதிபதி முகமது சபிக் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்குரைஞர் பி.எஸ் ராமன், ‘2 ஆம் கட்ட மெட்ரோ ரயில் நிலையங்கள் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில், அனைத்து வசதிகளுடன் கட்டப்படும்’ என உறுதியளித்தார்.

இதை பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், இதுகுறித்து அரசு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு, விசாரணையை தள்ளி வைத்தனர்.

AI ஏர்போர்ட் சர்வீசஸ் லிமிடெட்
AI AIRPORT SERVICES

AI ஏர்போர்ட் சர்வீசஸ் லிமிடெட்
வேலை வாய்ப்பு

AI ஏர்போர்ட் சர்வீசஸ் லிமிடெட் தற்போது காலியாக உள்ள பின்வரும் பதவிகளை நிரப்ப மற்றும் ஏதிர்காலத்தில் உருவாகும் காலியிடங்களுக்கான காத்திருப்பு பட்டியல் தயாரிக்க விரும்புகிறது. பின்வரும் பதவிகளில் கடமையாற்ற ஒரு குறிப்பிட்ட கால ஒப்பந்த அடிப்படையில், தேவையான தகுதிகளை பூர்த்தி செய்கின்ற இந்திய குடிமக்களிடமிருந்து (ஆண் மற்றும் பெண்) விண்ணப்பங்களை வரவேற்கப்படுகின்றன. அவர்களின் செயல்பாட்டினைப் பொறுத்தும், தேவையைப் பொறுத்தும் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படலாம்.

வ.எண்	விவரங்கள்	நிலையம்
1	தலைவர் IT / துணைத் தலைவர் IT	டெல்லி
2	மேலாளர்- IT	கொல்கத்தா / மும்பை
3	அதிகாரி- IT	மும்பை/சென்னை/கொல்கத்தா/அமிர்தசரஸ்/டெல்லி
4	நிதி மேலாளர்	மும்பை / சென்னை / கொல்கத்தா

ஒதுக்கீடு பிரிவினருக்கு அரசு வழிகாட்டுதல் பொருந்தும்.
விண்ணப்பப் படிவம் மற்றும் பிற விவரங்களுக்கு, எங்கள் வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ள **விளம்பரத்தைப்** பார்க்கவும்-**https://aiasl.in/Recruitment & https://www.aiahl.in/Careers.aspx.**

Annexure 25

IndusInd Bank Limited

Registered Office: IndusInd Bank Limited, 2401 Gen. Thimmayya Road (Cantonment), Pune - 411 001, India.
Corporate Office: IndusInd Bank Limited, One Indiabulls Centre, Tower 1,8th Floor,841 Senapati Bapat Marg, Elphinstone Road (W), Mumbai
Branch Office: IndusInd Bank Limited, AL Complex, W 115 A, 3rd Avenue, Anna Nagar, Chennai -600040.

PUBLIC NOTICE

As per RBI guidelines dated DOR.LEG.REC/40/09.07.005/2021-22, this public notice is hereby given as there are rental outstanding/inoperative lockers on the following safety deposit lockers located at the Anna Nagar branch of IndusInd Bank Limited, having its Registered, Corporate and Branch offices as stated above.

Sr. No	Branch Name	Locker No	Name of Hirer	Rental Outstanding/Overdue since (period in months)	Inoperative since (Period in months)
1	Anna Nagar	LK 2/I	DR C Giridharan / G Sivagami	40 Months	45 Months
2	Anna Nagar	LK 19/I	K K Ramesh	45 Months	60 Months

IndusInd Bank has served due notice through courier about the arrears of rent /Locker being inoperative to the above mentioned individuals, twice at the address as registered with the Branch.
As per the Terms and Conditions of the Locker Agreement, IndusInd Bank Ltd is proposing to open the safety deposit lockers after 14 days from the date of this notice, to take custody of the locker contents on account of the rent being overdue and unpaid for three consecutive years.
IndusInd Bank Ltd will not be responsible in any manner to any person for the sale of the contents of the lockers after the said notice period.

Place: Chennai
Date: 03.07.2024

BEFORE THE ARBITRATOR
UNDER SEC. 84 OF THE MULTI STATE CO-OPERATIVE SOCIETIES ACT 2002
A.R.C. No.340/2024

The Repatriates Cooperative Finance & Development Bank Ltd., called as 'REPCO BANK',
- Petitioner

-Vs-

1. Sri S. Kirupakaran, S/o Sri A. Sivvaji
2. Smt S. Thilagavathy, W/o Sri S. Kirupakaran
- Respondents

NOTICE THROUGH PUBLICATION

To
1Sri S. Kirupakaran, S/o Sri A. Sivvaji
2.Smt S. Thilagavathy, W/o Sri S. Kirupakaran, **Both are Residing**: Featherlite Vaikundam Apartment, No 213, B Block, No.6, GST Road, Nandivaram Guduvancheri, Chennai- 603 202

Whereas the Repatriates Cooperative Finance and Development Bank Ltd., called as **'REPCO BANK'** has filed a Claim Petition in A.R.C. No.340/2024 against you, the Respondents for recovery of the Claim amount of Rs.1,17,02,940/- (Rupees One Crore Seventeen Lakhs Two Thousand Nine Hundred and Forty Only) as on 31.01.2024 along with further interest thereon.

You, the Respondents, were summoned and directed to appear on 18.03.2024 and to show cause as to why the Claim should not be allowed and to answer all material questions relating to the Claim Petition. However the said notices were returned without being served.

You are therefore directed to appear **on 20th day of July 2024 at 10.30 a.m. at ARBITRATION CENTRE, III Floor, No. 55, IV Main Road, (Ramachandra Aathithanar Street), Gandhi Nagar, Adyar, Chennai - 600020** as the date fixed for hearing of the Claim Petition; in order to support your proposed stand.

Take notice that in default of your appearance on the above said Hearing date, this ARC claim will be heard and decided in accordance to law and Award will be passed on merits.

Given under my hand and seal of this office on this the **15th day of June 2024**.

(S. SETHURAMAN)
Signature of the Arbitrator

ASHOK LEYLAND
உங்கள் கனவுகள் எட்டும் தூரத்தில்

அசோக் லேலண்ட் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: நெ.1, சாதார் பட்டேல் ரோடு, கிண்டி, சென்னை - 600 032.
போன்: +91 44 2220 6000, பேக்ஸ்: +91 44 2220 6001
CIN: L34101TN1948PLC000105; இணையதளம்: www.ashokleyland.com
மின்னஞ்சல்: secretarial@ashokleyland.com

75-வது ஆண்டு பொதுக்குழுக் கூட்ட (AGM) அறிவிப்பு, மற்றும் தொலைவிலிருந்து மின்னணு வாக்களிப்பு தகவல், மற்றிய அறிவிப்பு

உறுப்பினர்களுக்கு இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால் ஆண்டு பொதுக்குழு கூட்டம் கூட்டுவதற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களை பரிவர்த்தனை செய்ய, கம்பெனியின் 75-வது ஆண்டு பொதுக்குழு கூட்டமானது **25 ஜூலை 2024, வியாழக்கிழமை அன்று பிற்பகல் 3.00 மணிக்கு** (IST) காணொளி வாயிலாக (**"VC"**) அல்லது மற்ற ஒலி, காட்சி சாதனங்கள் (**"OAVM"**) வாயிலாக, கம்பெனிகள் சட்டம் 2013-ன் (சட்டம்) அனைத்து பொருந்துகின்ற ஷரத்துகளின்படியும், அதனடிப்படையில் வகுக்கப்பட்ட விதிகளின்படியும், மற்றும் இந்திய பங்குகள் பரிவர்த்தனைக் கழகத்தினால் ("SEBI") (பட்டியலிடும் கடமைகள், அறிவித்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள்-2015 (SEBI பட்டியலிடும் ஒழுங்குமுறைகள்) மற்றும் சேர்த்து வாசிக்கவேண்டிய காப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தினால் (MCA) அளிக்கப்பட்ட பொதுச் சுற்றறிக்கைகள் படியும் (அதற்கு தொடர்புடைய சுற்றறிக்கைகள்) நடத்தப்படவுள்ளது. இந்த பொதுக்குழு கூட்டத்தில் (AGM) இணையதளம் https://www.evoting.nsdl.com/-ல் நேரலையாக காணலாம், அல்லது VC / OAVM மூலமாக உறுப்பினர்கள் பங்கேற்கலாம். கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 103-ன் கீழ் VC / OAVM வசதி மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் குறைந்தபட்ச எண்ணிக்கை (Quorum) நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்படுவார்கள்.

மேற்குறித்த பொருந்துகின்ற சுற்றறிக்கைகளின்படி, AGM அறிவிப்பு மற்றும் 2023-2024 ஆம் நிதி ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கை, கம்பெனியிடம் / டெபாசிட்டரி பார்ட்டிசிபன்ட்களிடம் தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் ஜூலை 2, 2024 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி ஆவணங்கள் கம்பெனியின் இணையதளத்திலும் www.ashokleyland.com, பங்கு பரிவர்த்தனை நிறுவனங்களான BSE லிட., ("BSE") இணையதளத்திலும் www.bseindia.com மற்றும் இந்திய தேசிய பங்கு பரிவர்த்தனை நிறுவனமான ("NSE") www.nseindia.com கிடைக்கும். எவ்வாறாயினும், 75வது AGM மற்றும் வருடாந்திர அறிக்கையின் காகித நகல், einward@integratedindia.in என்ற மின்னஞ்சல் மூலம் தங்கள் க்ளையண்ட் விவரங்கள்/ கிளையண்ட் IDயை முறையாக மேற்கோள் காட்டி குறிப்பாக கோரும் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும்.

உறுப்பினர்களின் வாக்குரிமைகள் என்பது, வரம்புத்தேதியான அதாவது, ஜூலை 18, 2024 அன்று கம்பெனியின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் உறுப்பினர்கள் வைத்துள்ள சமவீதப் பங்குகளின் அளவுக்கேற்ப அமைந்திடும்.

கம்பெனிகள் சட்டம் பிரிவு 108 வழித்துகள், மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014-(விதிகள்) விதி 20-க்கு இணங்க, SEBI பட்டியலிடும் ஒழுங்குமுறைகள்-ஒழுங்குமுறை 44-க்கு இணங்க AGM அறிவிப்பில் உள்ளபடி AGM-ல் நிறைவேற்றப்படவுள்ள உத்தேச தீர்மானங்கள் மீது தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு ("remote e-voting") செய்வதற்கான வசதியை நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ("NSDL") மூலம் நிறுவனம் ஏற்பாடுகளை செய்துள்ளது.

மேலும் AGM நடைபெறும்போது உறுப்பினர்கள் தங்களது வாக்குகளை மின்னணு முறையில் வாக்குப்பதிவு செய்வதற்கும் உரிய ஏற்பாடுகளை கம்பெனி செய்துள்ளது. AGM-ல் பங்கேற்கும் உறுப்பினர்கள் தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு செய்யாத நிலையில் AGM-ல் வாக்களிக்கலாம். தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு மூலம் தமது வாக்குரிமையை பதிவு செய்திட்ட உறுப்பினர் AGM-ல் பங்கேற்கலாம், ஆனால் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்கவியலாது.

மின்னணு வடிவில் (Demat) மற்றும் தாள் (physical) வடிவில் பங்குகளை வைத்துள்ள மற்றும் தங்களது மின்னஞ்சல் முகவரிகளை, கம்பெனியிடம் பதிவு செய்திடாமல் இருக்கும் உறுப்பினர்கள் தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு மற்றும் AGM நடைபெறும் போது தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு செய்யும் விதம் குறித்து AGM அறிவிப்பில் தரப்பட்டுள்ளன. அந்த விவரங்கள் கம்பெனியின் இணையதளத்திலும் www.ashokleyland.com, பங்கு பரிவர்த்தனை நிறுவனங்களான BSE மற்றும் NSE நிறுவனங்களின் இணையதளங்களிலும் www.bseindia.com, மற்றும் www.nseindia.com, மற்றும் NSDL இணையதளத்திலும் evoting@nsdl.com கிடைக்கும்.

தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு **திங்கட்கிழமை, ஜூலை 22, 2024 அன்று காலை 9:00 மணிக்கு** (IST) **தொடங்கி புதன்கிழமை ஜூலை 24, 2024 அன்று மாலை 05:00 மணிக்கு** (IST) முடிவடையும். குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு மேல் தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாது மற்றும் இதற்கு தொடர்பான வழிமுறை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் நேரத்திற்கு மேல் NSDL-லால் முடக்கப்படும்.

பங்குகளை வாங்கி வரம்புத் தேதியான அதாவது **வியாழக்கிழமை, ஜூலை 18, 2024** அன்று கம்பெனியின் உறுப்பினர்களாக இருக்கும் நபர்கள் தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு செய்யும் வசதியைப் பெறத் தகுதி உடையவராவர், அல்லது AGM-ல் பங்கேற்கமுடியும் மற்றும் AGM-ல் மின்னணு வாக்குப்பதிவும் செய்யத் தகுதி உடையவராவர்.

AGM அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு பங்குகளை வாங்கி வரம்புத்தேதி அன்றுள்ளபடி பங்குகளை வைத்திருக்கும் கம்பெனியின் உறுப்பினர்களாக இருக்கும் எந்தவொரு நபரும் Login ID மற்றும் கடவுச்சொல்லைப்பெற வேண்டுகோள் அனுப்பவேண்டிய மின்னஞ்சல் evoting@nsdl.com. ஒரு உறுப்பினர் ஏற்கனவே மின்னணு வாக்குப்பதிவுக்கு NSDL வசம் பதிவு செய்திருப்பாரானால் அவர் தம்மிடம் உள்ள அதே Login ID மற்றும் கடவுச்சொல்லை தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு செய்யப் பயன்படுத்தலாம். இது தொடர்பான கூடுதல் விவரங்கள் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு செய்வது தொடர்பான விசாரணைகள் ஏதேனும் இருந்தால் உறுப்பினர்கள் www.evoting.nsdl.com எனும் இணையத்தளத்தில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) பகுதிலையும், பதிவிறக்கம் பகுதியில் மின்னணு வாக்குப்பதிவு கையேட்டையும் பார்க்கவும் அல்லது evoting@nsdl.com வேண்டுகோள் அனுப்பவும்: அல்லது அழைக்கவும் டணமில்லா தொ.பே.எண்: 1800 1020 990/1800 224 430 அல்லது evoting@nsdl.com க்கு கோரிக்கை அனுப்பவும் அல்லது அமித் விஷால், உதவி துணைத்தலைவர், அல்லது பல்லவி மஹ்ரே, முதுநிலை மேலாளர், நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் evoting@nsdl.com அல்லது AmitV@nsdl.com அல்லது pallavid@nsdl.com என்ற மின்னஞ்சல் முகவரியில் மின்னணு வாக்குப்பதிவு குறித்த உங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

அசோக் லேலண்ட் லிமிடெட்டுக்காக
S/d-
N ராமநாதன்
கம்பெனி செயலாளர்

சென்னை
ஜூலை 02, 2024

Visit us at : www.ashokleyland.com

HINDUJA GROUP

THE NEW INDIAN EXPRESS

requires
ASSISTANT ACCOUNTANT
at
COIMBATORE

Qualification and experience:
B.Com
with minimum 1 to 2 years in Accounting, Costing, Budgeting etc.

Freshers can also apply.

Exposure to MIS and accounts software packagesis desirable.

Salary will not be a constraint for deserving candidate.

Interested candidates may mail us at managercbe@newindianexpress.com or send their resume to:

Chief Manager
The New Indian Express Group
Express Garden, 110, Pankaja Mill Road, Ramanathapuram, Coimbatore-641 045.

ASSISTANT ACCOUNTANT

FEDERAL BANK

பதிவு அலுவலகம்: ஆலுவாய், கேரளா
LCRD/சென்னை யுவிசன்: எண்.27, 5வது தளம், அக்ஷயா சாந்தி, தலைமை அஞ்சல் அலுவலகம் எதிரில், அண்ணாசாலை, சென்னை-600002. Ph: 044-4774 8486/87
Email: chnlcrd@federalbank.co.in Website: www.federalbank.co.in, CIN: L65191KL1931PLC000368

விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை நொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (விதி 8(6) சொத்துவசிக்கவும்) பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண் 8(6)-கீழ் அமையில் வைக்கப்பட்டுள்ள அலையாச் சொத்துகளை விற்பனை செய்தல்.

பெடரல் பேங்க்ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பெடரல் பேங்க்ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **ஆக்கப்பூர்வ சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு **கடன் பெற்றவர்களான 1. M/s அரிஸ்டோ ஜெர் எக்ஸ்போர்ட்ஸ், பங்குதாரர் நிறுவனம்,** பதிவு அலுவலகம், எண்.8, மௌதா தெரு, ந